இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 01.05.2026

# ரயில்வே பணியிடங்களை ஒழிப்பதா?

ஆட்சிக்கு வந்ததும் ரயில்வே துறைக்கான தனி நிதிநிலை அறிக்கையை ஒழித்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இப்போது 30 ஆயிரம் ரயில்வே பணியிடங்களை ஒழிக்கத் திட்டமிட்டுள்ளார்கள்.

2018 முதல் 92 ஆயிரம் ரயில்வே பணிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. 2024-25 ஆம் நிதி ஆண்டிலும் 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியிடங்கள் ஒழிக்கப்பட்டன. எனவே ரயில்வே துறையில் ஆட்களைக் குறைப்பது தொடர்ந்து நடந்து வரும் விவகாரமே ஆகும்.

**இந்திய ரயில்வேயில் 2026-27 நிதியாண்டில் சுமார் 29,608 "Non-Safety" (பாதுகாப்பு அல்லாத) பணியிடங்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒழிக்கத் திட்டமிட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. நாடு முழுவதும் சுமார் 29,608-க்கும் மேற்பட்ட பதவிகள் ரத்து செய்யப்பட உள்ளன.**

ரயில்வேயில், பணியாளர்களைக் குறைப்பதன் மூலம் நிர்வாகச் செலவைக் குறைத்து, புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்துவது இதன் நோக்கம் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

ரயில்வே வாரியத்தின் இயக்குனர் அமித் சிங் மெஹ்ரா, அனைத்து மண்டல ரயில்வே பொது மேலாளர்களுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ரயில்வேயின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கையில் 2 சதவீதத்தை இந்த சீரமைப்பு நடவடிக்கைக்கு உட்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்திய ரயில்வேயில் சுமார் 14.80 லட்சம் பணியாளர்கள் உள்ள நிலையில், இந்த 2 சதவீத இலக்கின் கீழ் 29,608 பணியிடங்கள் பாதிக்கப்பட உள்ளன.

இந்தப் புதிய திட்டத்தால் வட இந்திய ரயில்வே (Northern Railways) மிக அதிக அளவில் பாதிக்கப்படும் எனத் தெரிகிறது. அங்கு மட்டும் சுமார் 3,303 பணியிடங்கள் இந்த மாற்றத்திற்கு உள்ளாகின்றன. இதனைத் தொடர்ந்து:

கிழக்கு ரயில்வே: 2,544 பணியிடங்கள்
மத்திய ரயில்வே: 2,492 பணியிடங்கள்
மேற்கு ரயில்வே: 2,339 பணியிடங்கள்
தெற்கு ரயில்வே: 1,900 பணியிடங்கள்

ஆகியவை அதிக பாதிப்புக்குள்ளாகும் முதல் நான்கு மண்டலங்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

இவை தவிர, தென் மத்திய ரயில்வே (SCR), தென்கிழக்கு ரயில்வே (SER) மற்றும் கிழக்கு மத்திய ரயில்வே (ECR) ஆகிய மண்டலங்களில் தலா 1,800 முதல் 2,000 பணியிடங்கள் வரை குறைக்கப்பட வாய்ப்பு உள்ளது.

தென்மேற்கு ரயில்வேயில் (SWR) ஒப்பீட்டளவில் குறைவாக 893 பணியிடங்கள் மட்டுமே முறைப்படுத்தப்பட உள்ளன. இது தவிர, ரயில்வேயின் சிறிய பிரிவுகளில் 20 முதல் 217 பணியிடங்கள் வரை குறைக்கப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காலாண்டிலும் சீராகச் செய்து முடிக்க வேண்டும் என்று ரயில்வே வாரியம் அறிவுறுத்தியுள்ளது. ரயில்வே வாரியத்தின் செயல்திறன் மற்றும் ஆராய்ச்சி (E&R) இயக்குநரகத்தின் வருடாந்திர புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இந்த இலக்குகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**இந்திய ரயில்வேயில் நாடு முழுவதும் 4 லட்சத்துக்கும் அதிகமான காலிப் பணியிடங்கள் (Non-Gazetted Posts) நிரப்பப்படாமல் உள்ளன. சிக்னல் மற்றும் தொலைத் தொடர்பு, போக்குவரத்துத் துறை ஆகியவற்றில் கணிசமான எண்ணிக்கையிலான பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இதில், சிக்னல் மற்றும் தொலைத்தொடர்புத் துறையிலும் போக்குவரத்துத் துறையிலும் அதிகமான பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. ஊழியர்களே இல்லாமல் ரயில்வே துறையை நடத்த முடியுமா?**

நாட்டிலேயே அதிக பணியாளர்கள் கொண்ட துறையாக ரயில்வே இருக்கிறது. குறைந்த செலவில் பாதுகாப்பான பயணம் என்பதால் மக்களின் சிறந்த தேர்வாக ரயில்வே இருக்கிறது. தினந்தோறும் 22 ஆயிரம் ரயில்கள் ஓடுகின்றன. பயணிகள் போக்குவரத்து மட்டுமல்ல, சரக்குப் போக்குவரத்தும் அதிகமாகி வரும் சூழலில் பணியாளர்களைக் குறைக்கும் செயலைச் செய்திருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

**ரயில்வே துறைக்கான தனி நிதிநிலை அறிக்கை வெளியிடுவதை நிறுத்தினார்கள். ஒன்றிய பொது நிதி நிலை அறிக்கையில் சேர்த்தார்கள். பின்னர் வந்த நிதிநிலை அறிக்கையில், ரயில்வே குறித்த தகவல்களைப் படிப்படியாக குறைத்தார்கள். புதிய வழித்தடங்கள் உருவாக்குவதில் பாரபட்சம் காட்டினார்கள். அதிலும் குறிப்பாக தென்னகம் பெரிதும் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது.**

**பொதுப் போக்குவரத்தின் அடித்தளமாக இருக்கக் கூடிய ரயில் பயணமானது பாதுகாப்பற்றதாக மாறிக் கொண்டு இருக்கிறது.**

கடந்த ஆண்டு கடலூர் செம்மங்குப்பம் ரயில்வே கேட்டில் மிகப்பெரிய விபத்து நடந்தது. தண்டவாளத்தை கடக்க முயன்ற பள்ளி வேன் மீது ரயில் மோதியது. ரயில் வருகிறது என்றால் கேட் மூட வைக்கப்பட்டு இருக்க வேண்டும். கேட் திறந்து இருந்ததால் பள்ளி வாகனம் செல்ல முயற்சித்துள்ளது. கேட்டை மூடாதது யார் தவறு? 2030 ஆம் ஆண்டுக்குள் அனைத்து லெவல் கிராசிங்குகளில் மேம்பாலம், கீழ் பாலம் அமைக்கப்பட்டுவிடும் என்று சொல்லப்பட்டுள்ளது. அனைத்து ரயில்வே கேட்டுகளும் 'இன்டர் லாக்' தொழில் நுட்பத்தின் அடிப்படையில் மாற்ற வேண்டும். இதுபோன்ற பணிகளில் கவனம் செலுத்த ஊழியர்கள் மிக அதிகமாகத் தேவை.

**ரயில்வே சேவையின் தரத்தை உயர்த்தவும், ரயில் பயணிகளின் பாதுகாப்பை கவனிக்கவும் ஊழியர்கள் மிக அதிகமாகத் தேவை. பணியிடங்களை ஒழிப்பது என்பது ரயில் சேவையை மதிக்காத தன்மை ஆகும். ரயில்வே துறையின் முக்கியத்துவத்தைக் குறைப்பதும் ஆகும். தினந்தோறும் கோடிக்கணக்கான மக்கள் ரயில் சேவையை பயன்படுத்துகிறார்கள். அந்த மக்களை மதிக்காத தன்மை ஆகும். ஒட்டுமொத்த சாதாரண, சாமானிய மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி இது. ஊழியர்களைக் குறைத்துக் கொண்டே போவது, ரயில்வே துறையை தனியார்மயமாக்கும் திட்டத்தின் தொடர்ச்சியாகவே பார்க்க வேண்டி உள்ளது. ஆட்களைக் குறைப்பதால், இப்போது பணியில் இருப்பவர்களுக்கும் பணிச்சுமை அதிகரிக்கும்.**

**ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம் என்று வாயால் வடை சுட்டார் பிரதமர் மோடி. ஆண்டுதோறும் லட்சக்கணக்கான, ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளை ஒழித்துக் கொண்டு இருப்பதைத் தான் தொடர்ந்து பார்க்கிறோம். 'மத்திய அரசுத் துறையில் வரும் இரண்டு ஆண்டுகளில் 10 லட்சம் பணியிடங்கள் நிரப்பப்படும்" என்று பிரதமர் மோடி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார். ஆனால் தொடர்ச்சியாக வேலை பறிப்புகள் தான் நடக்கின்றன.**

# அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு எதிராக அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்கு ரத்து!

## உயர் நீதிமன்றம் உத்தரவு!


சென்னை, மே 1 -

வீட்டு மனை ஒதுக்கீடு தொடர்பான வழக்கின் அடிப்படையில் சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு எதிராக அமலாக்கத் துறை பதிவு செய்த வழக்கை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2008ம் ஆண்டு தமிழ்நாடு அரசின் விருப்புரிமை ஒதுக்கீட்டில் வீட்டு மனை ஒதுக்கீடு செய்ததில் முறைகேடு நடந்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக கடந்த 2011ம் ஆண்டு வழக்குப் பதிவு செய்தது.

இந்த வழக்கின் அடிப்படையில் ஐ.பெரியசாமி உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறை 2020ம் ஆண்டு வழக்குப்பதிவு செய்தது. இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி ஐ.பெரியசாமி தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி. அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.



அப்போது, அமைச்சர் பெரியசாமி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் முத்து கணேச பாண்டியன், லஞ்ச ஒழிப்புத் துறை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த 7 பேர் மீதான வழக்குகளையும் சென்னை உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் விசாரித்து, இந்த முறைகேட்டில் குற்றச்சதியும் நிதி இழப்போ இல்லை என தெரிவித்து லஞ்ச ஒழிப்புத் துறை பதிவு செய்த வழக்கை ரத்து செய்துள்ளன.

இந்தநிலையில், அமலாக்கத் துறை பதிவு செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று வாதிட்டார். இந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட தலைமை நீதிபதி அமர்வு, அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு எதிராக அமலாக்கத் துறை பதிவு செய்த வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டது.

## அதிகாரிகள் நியமன விவகாரம்:

# அமைச்சர் கே.என்.நேரு மீது வழக்குப்பதிய உத்தரவிடவில்லை!

## உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு உத்தரவு!

*சென்னை, மே 1 -*

*நகராட்சி நிர்வாக துறையில் 2538 உதவி மற்றும் இளநிலை பொறியாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் நியமனத்துக்கு 634 கோடி ரூபாய் லஞ்சம் பெறப்பட்டுள்ளதாக கூறி இது சம்பந்தமாக வழக்குப்பதிவு செய்யுமாறு தமிழக டி.ஜி.பி.க்கு அமலாக்கத் துறை கடிதம் அனுப்பியிருந்தது. இந்த கடிதத்தின் அடிப்படையில், வழக்குப்பதிவு செய்யுமாறு லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிடக் கோரி அ.தி.மு.க. எம்.பி. இன்பதுரை சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.*



*இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அமலாக்கத் துறை கடிதத்தின் அடிப்படையில் உடனடியாக வழக்குப்பதிவு செய்யுமாறு லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட்டிருந்தது.*

*இந்த உத்தரவின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யாத லஞ்ச ஒழிப்புத் துறைக்கு எதிராக இன்பதுரை தரப்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. இந்நிலையில், அதிகாரிகள் நியமன முறைகேடு தொடர்பாக வழக்குப்பதிவு செய்யுமாறு பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழக அரசும், அமைச்சர் கே.என்.நேரு தரப்பிலும் மறு ஆய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.*

*இந்த அனைத்து வழக்குகளும், தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, அமைச்சர் கே. என்.நேரு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பு தனது தரப்பில் வாதங்களை முன் வைக்க வாய்ப்பளிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.*

*அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், அமைச்சர் நேருவுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு உத்தரவில் கூறவில்லை. முறைகேடு தொடர்பாக வழக்குப்பதிவு செய்யவே உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் விரிவான வாதங்கள் வைக்கப்பட வேண்டும் என்பதால் விசாரணை கோடை விடுமுறைக்கு பின் தள்ளி வைக்கப்படுகிறது என்றனர். அப்போது கே.என். நேரு தரப்பு வழக்கறிஞர், அதுவரை வழக்குப்பதிவு செய்யுமாறு பிறப்பித்த உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டும் என்று கோரப்பட்டது.*

*இதையடுத்து, எந்த உத்தரவும் பிறப்பிக்காமல் தமிழக அரசு மற்றும் கே.என்.நேருவின் மறு ஆய்வு மனுக்களையும், இன்பதுரையின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் ஜூன் 4வது வாரத்துக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.*

## காட்பாடி – கே.வி.குப்பம் சட்டமன்றத் தொகுதிகளில்

# தேர்தல் பணியாற்றிய கழக - கூட்டணிக் கட்சியினர் அனைவருக்கும் நன்றி!

## வேலூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிக்கை!

*வேலூர், மே 1 -*

*வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-*

*ஒற்றுமையுடன் செயல்பட்ட அனைவருக்கும் என் நன்றி!*

*நடந்து முடிந்த 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் காட்பாடி மற்றும் கே.வி.குப்பம் சட்டமன்றத் தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களின் வெற்றிக்காக அயராது உழைத்த அனைத்து ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை, வட்ட கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை கழக பொறுப்பாளர்கள், பார்வையாளர்கள் கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள், கழகத்தின் இரத்த நாளங்களாக விளங்கும் கடைக்கோடி தொண்டர்கள், BLA2, BDA, BLC சார்பு அணிகள் சார்ந்த நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவருக்கும் வேலூர் வடக்கு மாவட்டச் செயலாளராக என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்ட அமைப்பில், ஒற்றுமையுடனும் ஒழுங்குடனும், திட்டமிட்ட முறையில் தேர்தல் பணிகளை முன்னெடுத்து, ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் தொடர்பை வலுப்படுத்திய உங்கள் உழைப்பே இந்த பிரச்சார பயணத்தின் அடித்தளமாக அமைந்தது. தேர்தல் என்பது வெறும் வாக்கு சேகரிப்பு அல்ல; மக்களின் நம்பிக்கையை வெல்லும் அரசியல் பொறுப்பு என்பதை நீங்கள் செயலில் நிரூபித்துள்ளீர்கள்.*



*திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள், மக்கள் நலத்திட்டங்கள், சமூகநீதி கொள்கைகள் ஆகியவற்றை வீடு தோறும் எடுத்துச் சென்று மக்களின் உள்ளங்களில் நம்பிக்கையை விதைத்த உங்கள் பணியே கூட்டணியின் வலிமையை உயர்த்தியுள்ளது. சவால்கள் பல வந்தபோதிலும், மன உறுதியுடனும் கட்டுப்பாட்டுடனும் செயல்பட்டு கழகத்தின் வலிமையை உயர்த்தியுள்ளீர்கள்.*

*இந்நிலையில், 2026 தேர்தலை முன்னிட்டு காட்பாடி மற்றும் கே. வி.குப்பம் தொகுதிகளுக்கு சிறந்த வேட்பாளர்களை வழங்கி, கழகத்தின் வெற்றிப் பாதையை உறுதிப்படுத்திய கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களுக்கும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களுடைய அரசியல் வழிகாட்டுதலும் உறுதியான தலைமையும் எங்கள் தேர்தல் பணிகளுக்கு பெரும் ஊக்கமாக அமைந்தது.*

*வேலூர் வடக்கு மாவட்டம் என்ற பொறுப்பை மேலும் வலுப்படுத்தி, கழகத்தின் கொள்கைகளையும், சாதனைகளையும் மக்களிடம் தொடர்ந்து கொண்டு சேர்த்து, வரும் காலங்களிலும் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.*

*அனைத்து உடன்பிறப்புகளுக்கும் மீண்டும் ஒருமுறை என் மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி. தெரிவித்துள்ளார்.*

# மே மாதத்துக்கான 2.5 டி.எம்.சி. தண்ணீரை திறந்து விட வேண்டும்!

## தமிழ்நாட்டின் கோரிக்கையை ஏற்று கர்நாடகாவிற்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு!

*புதுடெல்லி, மே 1 -*

*தமிழ்நாட்டுக்கு காவிரியில் மே மாதத்துக்கான 2 புள்ளி 5 டி.எம்.சி., தண்ணீரை திறந்து விட வேண்டும் என்று கர்நாடகாவுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.*

*காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் 50வது கூட்டம், அதன் தலைவர் எஸ். கே.ஹல்தர் தலைமையில் நடைபெற்றது.*

*இதில், தமிழ்நாடு, கர்நாடகா, கேரளம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் நீர்வளத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு சார்பில் நீர்வளத்துறை செயலாளர் ஜெயகாந்தன் காணொலி மூலம் பங்கேற்றார். இக்கூட்டத்தில் தமிழ்நாடு மற்றும் கர்நாடக அணைகளின் நீர்வரத்து, நீர் இருப்பு மற்றும் நீர் வெளியேற்றம் பற்றிய புள்ளி விவரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.*

*அப்போது, உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு மே மாதத்திற்கான 2 புள்ளி 5 டிஎம்சி தண்ணீரை திறந்துவிட கர்நாடகாவுக்கு உத்தரவிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டது.*

*கோடை வெயில் தொடங்கியுள்ளநிலையில், தமிழ்நாட்டில் உள்ள அணைகளில் 34% மட்டுமே நீர் இருப்பு உள்ளதால் தண்ணீர் திறப்பை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.*

*இதனையேற்ற காவிரி மேலாண்மை ஆணையம், தமிழ்நாட்டுக்கு காவிரியில் மே மாதத்துக்கான 2 புள்ளி 5 டி.எம்.சி., தண்ணீரை திறந்து விட வேண்டும் என்று கர்நாடகாவுக்கு உத்தரவிட்டுள்ளது.*